R 3744 (page 89)

# சக அங்கத்தினர்களைத் தண்டித்தல்

## PUNISHING FELLOW-MEMBERS

தெய்வீக வார்த்தைகளுக்கு இசைவாகத் தங்கள் ஜீவியங்கள் காணப்படுவதற்கென ஊக்கமாய் நாடிக்கொண்டிருக்கின்றதான அன்பான சகோதர சகோதரிகளில் சிலர் மில்லேனியல் டாண் தொகுதி VI-ஐ வாசிக்கையில், முன்பில்லாத அளவுக்கு மிகத் தெளிவாய் மத்தேயு 18:15-ஆம் வசனத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதான செயல்முறைகள் தொடர்பான திவ்விய ஒழுங்குகளைக் கவனித்து வருகின்றனர். அதில் முன்வைக்கப்பட்டுள்ளதான கட்டளைகள் அனைத்தையுமே கைக்கொள்வது அவர்களுக்கு அவசியமில்லை என்று சிலருக்கு நினைப்பூட்டப்படுவது அவசியமாய் இருக்கின்றது. சகோதரனுடைய தவறை அவர்கள் விட்டுவிடலாம் என்று எண்ணுவார்களானால், அது அவர்களது சிலாக்கியமாகும்; ஆனால் ஒருவேளை தவறை அவர்களால் விட்டுவிட முடியவில்லையெனில், அது அவர்களைத் தொடர்ந்து பாதித்துக்கொண்டிருக்கின்றதென்றால், அக்காரியத்தைக்குறித்து அவர்கள் மற்றவர்களிடத்தில் சொல்லாமல், மாறாக தவறைச் சரிப்படுத்துவதற்கு இருக்கும் ஒரே செயல்முறையென அவ்வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளதான கர்த்தருடைய கட்டளைகளைப் பின்பற்றிட வேண்டும்.

கீழ்ப்படியாமல் பிடிவாதமாய்க் காணப்படுபவர்களுக்கான - அதாவது செய்யப்பட்ட தவறுகளுக்கு எதிரான சகோதரனுடைய தனிப்பட்ட தெரிவித்தல்களுக்குச் செவிசாய்க்காமலும், இரண்டு (அ) மூன்று சகோதரருடைய ஆலோசனைக்குச் செவிசாய்க்காமலும், சபையாருடைய வார்த்தைகளுக்கும் செவிசாய்க்காமலும் இருப்பவர்களுக்கான தண்டனை வகை குறித்துச் சிலர் கேட்கின்றனர் - என்ன தண்டனை இத்தகையவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று நம்மிடம் கேட்கப்படுகின்றது. நம்முடைய சகோதரனைத் தண்டிப்பதற்கான உரிமை நமக்கு இல்லவேயில்லை என்பதே நம்முடைய பதிலாகும். அதைக் கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று கூறுகின்றார் மற்றும் தற்காலத்தில் ஒருவர் இன்னொருவரின் மாம்சத்தின்படியான பெலவீனத்தின் அளவைக்குறித்து நியாயந்தீர்க்கும் விஷயத்தில் நாம் திறமிக்கவர்களல்ல மற்றும் இதன் காரணமாக ஒருவர் இன்னொருவரின் பெலவீனத்தின் விஷயத்தில் மற்றவர் கொண்டிருக்கும் பொறுப்பின் அளவைக்குறித்து நியாயந்தீர்க்கும் விஷயத்திலும், நாம் திறமற்றவர்களாய் இருக்கின்றோம் மற்றும் கர்த்தர் நியாயமாய் இவைகளை நியாயந்தீர்ப்பார். மன்னிப்பதே நம்முடைய காரியமாய் இருக்கின்றதே ஒழிய, தண்டிப்பது நம்முடைய காரியமல்ல; நமக்குச் செய்யப்படும் பாதகத்தை நிறுத்த நாடுவது நம்முடைய சிலாக்கியமாய் இருக்கின்றது; ஆனால் கடந்த காலங்களில் நடந்துள்ளதான எதற்கும், எந்தத் தண்டனையையும் நாம் அளித்திடக்கூடாது.

மத்தேயு 18:15-ஆம் வசனத்தில் இடம்பெறும் கர்த்தருடைய கட்டளைகளிலுள்ள முழுப்பாடம் என்னவெனில்: இப்படியாக நமது சகோதரனுடைய அன்பை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் நமக்கு இன்னுமாய் அச்சகோதரன் பாதகம் பண்ணுவதிலிருந்து அவனைத் தடுப்பதற்கும் நாம் நாடிட வேண்டும் என்பதேயாகும். இப்படிச் செய்வதில் நாம் ஜெயமடைவோமானால், அதினால் அவனை நம்முடைய சகோதரர் என மீண்டுமாய்ப் பெற்றுக்கொள்வோம், அவனைக் குணமடையச் செய்வோம். ஆகையால் சகோதரனைச் சபையார் முன்னிலையில் கொண்டுவருவது தண்டனைக்கொடுப்பதற்கே என்பது எண்ணமாயிருப்பதில்லை, மாறாக கண்டிக்கப்படுவதற்காக, திருத்தப்படுவதற்காக, அவன் தன்

R3745 : page 90

நடத்தையிலுள்ள தவற்றினைக் கண்டு, அதை ஒப்புக்கொண்டு, தவறு செய்வதை விட்டுவிடத்தக்கதாகக் கடைசிமுறையாக மாத்திரமே அவன் சபையார் முன்னிலையில் கொண்டுசெல்லப்படுகின்றான். ஒவ்வொரு நடவடிக்கையிலும், சகோதரனைச் சரியான வழிக்குத் திருப்பிடுவதற்கே பிரயாசம் காணப்பட வேண்டுமே ஒழிய, அவன் தவற்றை அம்பலப்படுத்துவதற்காகவோ, அவனுக்குப் பாதகம்பண்ணுவதற்காகவோ, அவனைத் தண்டிப்பதற்காகவோ பிரயாசம் காணப்படக்கூடாது; ஏனெனில் "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன்" என்று கர்த்தர் சொல்லியுள்ளார்.

இந்த ஒரு வேதவாக்கியத்தின்படி சபையார் செய்ய முடிகிறது என்னவெனில்: அச்சகோதரனை மனந்திரும்பப்பண்ணுவதற்கும், சீர்ப்பொருந்தபண்ணுவதற்கும் எடுத்த பிரயாசங்களினால் பிரயோஜனம் இல்லாமல் போகுகையில், அவன் சரியானவற்றைச் செய்வதற்கான விருப்பத்தினை வெளிப்படுத்துவது வரையிலும், சபையார் அவனிடமிருந்து விசேஷித்த சகோதர ஐக்கியத்தினை நீக்கிக்கொள்ளலாம். அவன் விருப்பத்தினை வெளிப்படுத்தின பிற்பாடு, அவன் மீண்டுமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

குறிப்பிட்டக்காலம் சகோதரனை, "அஞ்ஞானியைப்போலவும், ஆயக்காரனைப்போலவும்" நடத்துவதும்கூட, அவனுக்கு பாதகம் பண்ணுவதை, அவனைத் தண்டிப்பதை, அவனைத் தாக்கி பழித்தூற்றுவதை, உலகத்திற்கு முன்னிலையில் அவனை அவமானப்படுத்துவதை (அ) அவமதிப்பதைக் குறிப்பதில்லை. இவைகளை - (பாதகம்பண்ணுதலையோ, தண்டிப்பதையோ, தாக்கிப் பழித்தூற்றுவதையோ, அவமானப்படுத்துவதையோ) - அஞ்ஞானிக்கோ (அ) ஆயக்காரனுக்கோ செய்திடுவதற்கும் நாம் அனுமதிக்கப்படவில்லை. எந்த ஓர் அஞ்ஞானியையோ அல்லது ஆயக்காரனையோ நாம் நடத்துவதுபோன்று, அச்சகோதரனை நாம் அன்பான, மரியாதையான விதத்தில் நடத்திட வேண்டும் மற்றும் உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட வகுப்பாராகிய சபைக்கு உரியதான விசேஷித்த உரிமைகள் (அ) சிலாக்கியங்கள் (அ) வாழ்த்துக்கள் (அ) வாக்குகள் (vote) அளிக்கும் வாய்ப்புகள் கொடுக்க மறுக்கப்பட வேண்டும்.

---

See more Books & Articles at www.foodfornewcreature.com